செ.வெ.எண்.477/2021 நாள்.30.10.2021

# திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங்களில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் வீடு வீடாக சென்று கொரானா தடுப்பூசி செலுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சியர்(பொ) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம் கொரட்டி கிராமம், கந்திலி ஊராட்சி ஒன்றியம் சின்னூர் கிராமம், நாட்றம்பள்ளி வட்டம் கல்னார்சம்பட்டி கிராமம், ஆம்பூர் வட்டம் பாலூர் கிராமம், சோமலாபுரம் கிராமம், வாணியம்பாடி வட்டம் கொத்தகொட்டை கிராமம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் வீடு வீடாக சென்று கொரானா தடுப்பூசி செலுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சியர் (பொ) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளின் போது மருத்துவர்களிடமும் செவிலியர்களிடமும் எத்தனை நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி எத்தனை நபர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பது குறித்தும் எவ்வளவு தடுப்பூசி இருப்பு உள்ளது குறித்தும் கேட்டறியப்பட்டது. கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்வதின் அவசியத்தையும், அதன் நன்மைகளையும் பொது மக்கள் அறியும்படி எடுத்துகூற வேண்டும். ஊராட்சி மன்ற தலைவர்களிடம் தங்கள் ஊராட்சியில் உள்ள பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு தடுப்புசி செலுத்தப்பட வேண்டும் என அறிவுறை வழங்கப்பட்டது.

மேலும் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் நடமாடும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் மூலமாக கொரோனா தடுப்பூசிகளை பொது மக்களுக்கு வீடுவீடாக சென்று செலுத்தப்பட்டு வருகிறது. இக்கொரோனா தடுப்பூசி முகாம்களின் மூலம் 100 சதவிகிதம் பொது மக்களுக்கு செலுத்தப்பட வேண்டும் என மருத்துவர்களுக்கும் செவலியர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் (பொ) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன் அவர்கள் அறிவுறைகளை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுகளின் போது திருப்பத்தூர் சார் ஆட்சியர் (பொறுப்பு) மற்றும் உதவி ஆணையர் (கலால்) திருமதி.பானு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.விஜயன், வட்டாட்சியர் திரு.சிவபிரகாசம், மருத்துவர்கள், கிராம செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**